அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை:-03/2015

எனது இல: CS/ICTS/01/06/2006 AMD
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள்,
உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி
அமைச்சு
சுதந்திர சதுக்கம் கொழும்பு 07
2015 சனவரி 29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்

**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பினை அமுல்படுத்தல்**

2014.12.26 ஆம் திகதிய 1894/26 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கபட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பானது 2009.12.09 ஆம் திகதிய 1631/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கபட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு, பிந்திய குறிப்பிற்கு ஏற்ப எடுக்கப்படும் அல்லது எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் நடவடிக்கைக்கு குந்தகமில்லாது, இத்தால் பதிலீடு செய்யப்படுகின்றது என்பதுடன் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து இது அமுலுக்கு வர வேண்டும்.

**2. உள்ளீர்ப்பு**

2009.12.09 ஆம் திகதிய 1631/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் பிரிவுக்கு அமைய 04/2011, 04/2011 (I) மற்றும் 04/2011 (II) இலக்கங்கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளுக்கு ஒத்திசைவாக மேற்கொள்ளப்பட்ட உள்ளீர்ப்புக்கள் மாற்றமுறாது தொடர்ந்திருத்தல் வேண்டும்.

**3. ஆட்சேர்ப்பு**

இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் 07 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இற்கான ஆட்சேர்ப்பானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வகுப்பு 2 மற்றும் 3 இற்கான ஆட்சேர்ப்பானது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**4. பணிகளைப் பொறுப்பளித்தல்**

I. நிர்வகித்தல் வசதிக்காக சேவைப் பிரமாணக் குறிப்பின் 1 ஆம் அட்டவணையில் வகிபாகங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன அத்துடன் அத்தகைய வகைப்பாடு

இல்லாவிடினும் சகல பணிகளையும்/ தேவைப்படுத்தப்பட்ட பணிகளை தற்போதுள்ள நிறுவனத் தலைவர்களால் அலுவலர்களுக்குப் பொறுப்பளிக்க முடியும்.

II. அலுவலர்களுக்கு தற்போது ஏனைய பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தால் அத்தகைய பணிகளானவை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு அமைய திருத்தப்பட்டு கடமைகள் மீண்டும் பொறுப்பளிக்கப்பட வேண்டும் மற்றும் அவசர சேவையின் பேரில் பணிகள் பொறுப்பளிக்கப்பட்டாலொழிய ஏனைய பதவிகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை அவர்களுக்குப் பொறுப்பளித்தலாகாது.

III. வகுப்பு 1 இன் தரம் 1 இனது பதவி ஒன்றாக இருக்கும் பணிப்பாளர் பதவி, வகுப்பு 1 இன் தரம் II/III இனது பதவி ஒன்றாக இருக்கும் பிரதிப் பணிப்பாளர் பதவி மற்றும் வகுப்பு 1 இன் தரம் III இனது பதவி ஒன்றாக இருக்கும் உதவிப் பணிப்பாளர் பதவி ஆகியவற்றுக்கான அலுவலர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 11 இற்கமைய நியமிக்கப்பட வேண்டும்.

## 5. பயிற்சி மற்றும் அபிவிருத்தி

### 5.1 அறிமுகப் பயிற்சி

சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 12.1.1 இற்கமைய நியமன அதிகாரி/ நிர்வாக அதிகாரியின் மூலம் ஒழுங்குசெய்யப்படும் அறிமுகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை சகல நியமன அலுவலர்களும் பூர்த்திசெய்ய வேண்டும்.

### 5.2 சேவைக்காலப் பயிற்சி

I. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்குரிய திறன்கள் மற்றும் புத்துருவாக்க அறிவு ஆகியவற்றை விருத்திசெய்வதற்கென குறைந்தது 40 மணித்தியாலங்கள் கொண்ட வருடாந்தப் பயிற்சிக் காலப்பகுதி ஒன்றாக உள்ள கற்கைநெறியில் பங்குகொள்வதற்கு ஒவ்வொரு அலுவலருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும்.

II. சகல நிபுணத்துவத் துறைகளையும் உள்ளடக்கும் கற்கைநெறிகளில் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நிறுவனத் தேவைப்பாடுகளை இலக்காகக் கொண்ட கற்கைநெறிகளில் பங்குகொள்வதற்கு திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களை வழிநடத்தி உதவுதல் வேண்டும்.

III. அத்தகைய கற்கைநெறிகளானவை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திலிருந்து அல்லது பொருந்தக்கூடியதாக நிறுவனத் தலைவரினால் தீர்மானிக்கப்படும் வேறு ஏதேனும் நிறுவனத்திலிருந்து தெரிவுசெய்யப்பட முடியும் என்பதுடன் ஆகக்குறைந்த பயிற்சிக் காலத்தினை உள்ளடக்கும் விதம் ஒன்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்கைநெறிகளுக்கு அலுவலர்களை

வழிப்படுத்த முடியும். மேலும், துறைக்குரியதான நிறுவனத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும் தனிப்பட்ட பயிற்சிக் கற்கைநெறிகளை இது உள்ளடக்க முடியும்.

IV. வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில், அலுவலர்கள் இப் பயிற்சிக் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்துள்ளார்களா என்பது பற்றி கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

## 6. வினைத்திறன் தடைகள்

6.1 வகுப்பு 3 இன் தரம் I இற்கும் வகுப்பு I இன் தரம் I இற்கும் பதவியுயர்த்தப்படுவதற்கு சேவைப் பிரமாணக் குறிப்பின் 15.3 ஆம் பிரிவுக்கமைய தகைமைபெற்று பதவியுயர்வுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட சேவைக் காலத்தினை ஏற்கனவே பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள், அவர்கள் முன்னைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது குறிப்பிடப்பட்டிராது இருப்பின் மாத்திரமே வகுப்பு 3 இன் தரம் II மற்றும் வகுப்பு I இன் தரம் II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளைச் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து அவர்களை விலக்களிக்க வேண்டும். எனினும், அவர்கள் பதவியுயர்த்தப்பட்ட தரத்திற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு சித்தியெய்த வேண்டும்.

6.2 சேவைப் பிரமாணக் குறிப்பின் 08 ஆம் பிரிவுக்கமைய ஏனைய சகல அலுவலர்களும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை சித்தியெய்த வேண்டும்.

## 7. பதவியுயர்வு

7.1 உள்ளீர்ப்பு வேளையில் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்திராத ஆனால் அடுத்த பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்ளும் முன்னர் பல்வேறுபட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துகொள்ளுமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளவர்கள் தவிர தகைமைகளைப் பூர்த்திசெய்த பின்னர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 04/2011 (ii) இற்கமைய மீள் உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10 ஆம் பிரிவுக்கமைய தர உயர்வுகளிற்கான தகைமைகளை பூர்த்திசெய்யும் திகதியிலுள்ளவாறு ஒவ்வொரு தரத்திலும் பதவியுயர்த்தப்பட வேண்டும்.

7.2 முன்னைய சேவைக்காலமும் பதவியுயர்வுக்காகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். மீள் உள்ளீர்ப்பில் கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலிருந்து வேறான சேவைக் காலப்பகுதியானது பதவியுயர்வில் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். சேவைப் பிரமாணக் குறிப்புடன் ஒத்திசைவாக மேற்கொள்ளப்படும் முதலாவது

பதவியுயர்வுக்காக மாத்திரமே முன்னைய சேவைக்காலம் கருத்திற்கொள்ளப்படுகின்றது.

7.3 பதவியுயர்வுக்கான கோரிக்கையானது பின்வருமாறு நிறுவனத் தலைவருக்கு ஊடாக முன்னளிக்கப்பட வேண்டும்

வகுப்பு 1 இலுள்ள பதவியுயர்வுகளுக்காக – படிவம் 01 இற்கு ஒத்திசைவாக

வகுப்பு 2 இலுள்ள பதவியுயர்வுகளுக்காக – படிவம் 02 இற்கு ஒத்திசைவாக

வகுப்பு 3 இலுள்ள பதவியுயர்வுகளுக்காக – படிவம் 03 இற்கு ஒத்திசைவாக

**ஜே. தடல்லகே**
செயலாளர்
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள்,
உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு

**<u>சராசரி செயற்றிறன் அடிப்படையில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இன் தரம் II/I இற்கான பதவியுயர்வுக்கான மாதிரி விண்ணப்பம்</u>**

01. முதலெழுத்துகளுடன் பெயர் :-
02. முதலெழுத்துகளால் குறிக்கப்படும் பெயர்:-
03. பிறந்த திகதி:-
04. தேசிய அடையாள அட்டை இல.:-
05. சேவையில் இணைந்த திகதி:-
06. இணைந்த சேவை நியமனக் கடிதத்தின் இலக்கம்:-
07. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி/ தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதி:-
08. வகுப்பு 1 இன் தரம் III/II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்திய திகதி
09. உரிய மட்டத்தில் வேறு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பூர்த்திசெய்த திகதி
10. வகுப்பு 1 இன் தரம் III இல் 10 வருட சேவையினை/ வகுப்பு 1 இன் தரம் II இல் ஏழு (07) வருட சேவையினைப் பூர்த்திசெய்யும் திகதி:-
11. தற்போது சேவையாற்றும் அலுவலகம்:

…................................... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இலுள்ள தரம் II/I இற்கு என்னைப் பதவியுயர்த்துமாறு நான் இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- …........................................

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

---

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

திரு/திருமதி/செல்வி …........................................................................ என்பவர் இவ் அமைச்சில் சேவையாற்றி வருவதுடன் பின்வருவனவும் இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றன.

I. …................ ஆம் திகதியிலுள்ளவாறு பத்து (10) வருட / ஏழு (07) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலப்பகுதியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
II. பத்து (10) / ஏழு (07) சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ளார்.
III. பதவியுயர்வுக்காக தகைமைபெறும் திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையினைப் பூர்த்திசெய்துள்ளார்.
IV. அனுமதிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய பதவியுயர்வுத் திகதிக்கு முன்வரும் பத்து (10) வருடத்தில்/ ஏழு (07) வருடத்தில் திருப்திகரமான அல்லது அதனிலுங்கூடிய செயற்றிறன் மட்டத்தினை நிரூபித்துள்ளார்.
V. அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறை எண்ணிக்கை ............ ஆகும்/ கூறப்பட்ட பத்து (10) வருட/ ஏழு (07) வருட காலப்பகுதியில் ஏதேனும் அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றிருக்கவில்லை.

VI. எதுவித தண்டனைக்கும் (எச்சரிக்கை நீங்கலாக) உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

VII. அலுவலருக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் நடைபெற்று வரவில்லை.

VIII. …................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

IX. வகுப்பு 1 இன் தரம் III/II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை சித்தியெய்தியுள்ளார்.

X. உரிய மட்டத்தில் வேறு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பூர்த்திசெய்துள்ளார்.

XI. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்தான கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ கணனிப் பொறியியல் அல்லது கணனித் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றுள்ளார் (வகுப்பு 1 இன் தரம் I இற்கான பதவியுயர்வுகளுக்கு மாத்திரமே உரியது)

…............................... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 1 இன் தரம் II/I இற்குப் பதவியுயர்த்தப்படுவதற்கு நான் இவ் அலுவலரை இத்தால் பரிந்துரைக்கின்றேன்.

திகதி : நிறுவனத் தலைவரின் கையொப்பம்:

பெயர்:

பதவி :

(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

குறிப்பு:- 1. I இலிருந்து II வரையிலான தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டிராமல் இருப்பின் தயவுசெய்து குறிப்பிடவும்

2. இப் படிவமானது வகுப்பு 1 இன் தரம் I மற்றும் II இற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.

படிவம் 02

**<u>சராசரி செயற்றிறன் அடிப்படையில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இன் தரம் II இற்கான பதவியுயர்வுக்கான மாதிரி விண்ணப்பம்</u>**

01. முதலெழுத்துகளுடன் பெயர்:-
02. முதலெழுத்துகளால் குறிக்கப்படும் பெயர்:-
03. பிறந்த திகதி:-
04. தேசிய அடையாள அட்டை இல.:-
05. சேவையில் இணைந்த திகதி:-
06. இணைந்த சேவை நியமனக் கடிதத்தின் இலக்கம்:-
07. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி:-
08. வகுப்பு 2 இன் தரம் II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்திய திகதி
09. உரிய மட்டத்தில் வேறு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பூர்த்திசெய்த திகதி
10. வகுப்பு 2 இன் தரம் II இல் 10 வருட சேவையினைப் பூர்த்திசெய்த திகதி :-
11. தற்போது சேவையாற்றும் அலுவலகம்:

…................................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இலுள்ள தரம் I இற்கு என்னைப் பதவியுயர்த்துமாறு நான் இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- …......................................

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

---

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

திரு/திருமதி/செல்வி …........................................................................ என்பவர் இவ் அமைச்சில் சேவையாற்றி வருவதுடன் பின்வருவனவும் இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றன.

I. …............... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
II. வகுப்பு 2 இன் தரம் II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை சித்தியெய்தியுள்ளார்.
III. ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
IV. …............... ஆம் திகதியிலுள்ளவாறு பத்து (10) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலப்பகுதியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
V. பத்து (10) சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ளார்.
VI. பதவியுயர்வுக்காக தகைமைபெறும் திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலப்பகுதியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
VII. அனுமதிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய பதவியுயர்வுத்

திகதிக்கு முன்வரும் பத்து (10) வருடத்தில் திருப்திகரமான அல்லது அதனிலுங்கூடிய செயற்றிறன் மட்டத்தினை நிரூபித்துள்ளார்.

VIII. அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறை எண்ணிக்கை ............ ஆகும்/ ஏதேனும் அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றிருக்கவில்லை.

IX. எதுவித தண்டனைக்கும் (எச்சரிக்கை நீங்கலாக) உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

X. அலுவலருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை.

…................................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 2 இன் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்படுவதற்கு நான் இவ் அலுவலரை இத்தால் பரிந்துரைக்கின்றேன்.

திகதி: நிறுவனத் தலைவரின் கையொப்பம்:

பெயர்:

பதவி :

(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

குறிப்பு:- I இலிருந்து X வரையில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்திசெய்யப்படாமலிருந்தால் தயவுசெய்து குறிப்பிடவும்

படிவ இல. 03

**<u>சராசரி செயற்றிறன் அடிப்படையில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் II/I இற்கான பதவியுயர்வுக்கான மாதிரி விண்ணப்பம்</u>**

1. முதலெழுத்துகளுடன் பெயர்:-
2. முதலெழுத்துகளால் குறிக்கப்படும் பெயர்:-
3. பிறந்த திகதி:-
4. தேசிய அடையாள அட்டை இல.:-
5. சேவையில் இணைந்த திகதி:-
6. இணைந்த சேவை நியமனக் கடிதத்தின் இலக்கம்:-
7. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி/ தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதி
8. வகுப்பு 3 இன் தரம் III/II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்திய திகதி
9. உரிய மட்டத்தில் வேறு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பூர்த்திசெய்த திகதி
10. வகுப்பு 3 இன் தரம் III/II இல் 10 வருட சேவையினைப் பூர்த்திசெய்த திகதி:
11. தற்போது சேவையாற்றும் அலுவலகம்:

…................................... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இலுள்ள தரம் II/I இற்கு என்னைப் பதவியுயர்த்துமாறு நான் இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- …......................................

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

---

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

திரு/திருமதி/செல்வி …...................................................................... என்பவர் இவ் அமைச்சில் சேவையாற்றி வருவதுடன் பின்வருவனவும் இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றன.

I. …............... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
II. வகுப்பு 3 இன் தரம் III/II இற்காக குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை சித்தியெய்தியுள்ளார்.
III. ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
IV. …............... ஆம் திகதியிலுள்ளவாறு பத்து (10) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலப்பகுதியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
V. பத்து (10) சம்பள ஏற்றங்களை ஈட்டியுள்ளார்.
VI. பதவியுயர்வுக்காக தகைமைபெறும் திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலப்பகுதியினைப் பூர்த்திசெய்துள்ளார்.
VII. அனுமதிக்கப்பட்ட செயற்றிறன் மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய பதவியுயர்வுத் திகதிக்கு முன்வரும் பத்து (10) வருடத்தில் திருப்திகரமான அல்லது அதனிலுங்கூடிய

செயற்றிறன் மட்டத்தினை நிரூபித்துள்ளார்.

VIII. அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறை எண்ணிக்கை ........... ஆகும்/ ஏதேனும் அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றிருக்கவில்லை.

IX. எதுவித தண்டனைக்கும் (எச்சரிக்கை நீங்கலாக) உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

X. அலுவலருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை.

…............................... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் வகுப்பு 3 இன் தரம் II/I இற்குப் பதவியுயர்த்தப்படுவதற்கு நான் இவ் அலுவலரை இத்தால் பரிந்துரைக்கின்றேன்.

திகதி :

நிறுவனத் தலைவரின் கையொப்பம்:

பெயர்:

பதவி :

(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

திகதி

குறிப்பு:-

1. I இலிருந்து II வரையில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்திசெய்யப்படாமலிருந்தால் தயவுசெய்து குறிப்பிடவும்
2. இப் படிவமானது வகுப்பு 3 இன் தரம் I மற்றும் II இற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.